உ

ஸ்ரீ மகாலெக்ஷிமியம்மன் துணை.

இராய குல மகாநாடு

குரோதன வரு அர்ப்பசி மீ [illegible] உ

கூடிய மீட்டிங்கியில் தீர்மானிக்கப்பட்ட

# தீர்ப்பு விபரம்.

இஃது

ஷை குலகுரு சுவாமி கன்னியப்பிள்ளை

பட்டியிலிருக்கும், மகா-ா-ா-ஸ்ரீ

ம. கெப்பய்யர் அவர்களால்

அனுப்பப்பட்டு ஷை யாரால்

போடிநாயக்கனூர்

"ஹக்கீம் பிரஸ்" என்னும்

அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1926

460
21 OCT 192
SCANNED
Y592.Rp 21195
.P,N26
N26.
67978

சிவமயம்

21 OCT 1926
MADRAS



1926 ௵ எப்பிரல்மீ 16 ௳க்குத்தமிழ்
அக்ஷய ௵ சித்திரை மீ 4 ௳ பெரியகுள
ம் தாலூகா ஆண்டிபட்டி கிராமம் கன்னி
யப்பிள்ளை பட்டியி லிருக்கும் ராயகுலக்கவு
ண்டர் மகாநாடு குலகுரு சுவாமி அவர்களா
கிய மகா-ள-ள-ஸ்ரீ, ம. கெப்பய்யசுவாமி அ
வர்கள் அனுப்பிய நடபடிக்கையும் நன்மா
ர்க்கங்களும் தனது அன்புள்ள சிஷ்யர்கள்
யாவரும் ஒற்றுமையாய் இருப்பதற்கான தி
ட்டமும் ஷ்டி மகாநாடு சபையின தீர்ப்பும்

67978

பெரியகுளம் தாலூகா தாசில்தார் மகா-ா-ா-ஸ்ரீ துரைச்சாமிநாயுடுகாரு அவர்களும், ஆண்டிபட்டி யூனியன்சேர்மன், தாலூகாபோர்டு& டிஸ்ட்ரிக்ட்போர்டு மெம்பர் மகா-ா-ஸ்ரீநா.சு. அழகிருசாமிநாயுடுகாரு அவர்களும் 1925 ஷு அக்டோபர் மீ 26 உக்குத் தமிழ் குரோதன ஷு அற்பிசி மீ 10உ திங்கட்கிழமை தினம் நிலக்கோட்டை தாலூகாவிருவிப்பட்டிகிருமம் எழு அன்னம்பட்டியில் ஏற்படுத்திய மீட்டிங்கிக்கு நம் ராயகுலக்கவுண்டர் மகாநாட்டிற்கு விஜயஞ் செய்து நம் வேண்டுகோளுக்கிணங்கி அக்கிராசனம் வகித்து நம் மீட்டிங்குக்கு யாதொரு பின்னமும் வராமல் பாது காப்பாற்றி நம் குலம் முன்னேற்ற மடைவதற்குத்தக்க சில நீதிகளேயும் இதில் சொல்லியிருக்கிறார்கள்.

நம் ராயகுலக் கவுண்டர் மகாநாட்டிற்கு குருக்கள் சுவாமியவர்கள் விஷயமாய் மீட்டிங்கிக்கு முன் நம்மவர்கள் வசிக்கும் கிராமங்களுக்கு வரவேற்புப் பத்திரிக்கை அனுப்பியதற்குப்பின் கன்னிவாடி ஜமீன் கசுவணம்பட்டி கிராமம் குரும்பபட்டியிலிருக்கும் கெ. பாவாடை அய்யர் அவர்கள் அனுப்பிய பத்திரிகையில் நான்தான் ராயகுலக்கவுண்டர் மகாநாட்டிற்கு குருக்கள் ஸ்தானம் பெற்றவரென்றும் எல்லா விடங்களிலும் நான்தான் முதன்மை யுடையவரென்றும் பத்திரிக்கை மூலமாய் வெளியாகி ஷை மீட்டிங்கியில் எனக்கும் ஷை கெ பாவாடை அய்யர் அவர்வர்களுக்கும் நான் தான் பட்டக்காரர், நான் தான்

ட்டக்காரர் என்று எங்கள் இரண்டு பேருக்கும் தா
ர ஏற்பட்டு நாங்கள் இரண்டுபேரும் ஷெ சபையி
சொன்னநிமித்தம் ஷெ மகாநாடு சபையார்களுக்
ள் சில சப்கமிட்டிமெம்பர் 30 பேர்களை நியமித்து
ஷெ மெம்பர்களும் ஷெ மகாநாடு சபையார்களும்
எங்களை ஓட் கொடுக்கும்படி சொன்னார்கள் நாங்கள்
சம்மதித்து ஷெ சபையில் நாங்கள் ஓட் கொடுத்ததி
ல் ஷெமகாநாடு சபையார்களின் தீர்ப்பாவன:—

நம்பர்கள் { கன்னியப் பிள்ளைபட்டி, ம கெப்பய்யர் அவர்களுக்கு ஓட்கொடுத்த புள்ளிகளின் பெயர்.

2 வது ராமசாமிக்கவுண்டர் 1, 10 ஆதீனம் தொண்டமான் புதுக்கோட்டை.

13வது சின்னமுத்தக்கவண்டர் 2, செந்துறை ஆதீனம்

14 வது கெப்பணகவுண்டர் 3, மணியாரம்பட்டி ஆ[தீனம்.

15 வது வெள்ளைச்சாமிக்கவுண்டர் 4, அஞ்சாதீனம் [நாகம்பட்டி.

20 வது த. முத்தக்கவுண்டர் 5, ராசிங்கபுரம் போடி [ஜெமீன்.

21 வது சுப்பயகவுண்டர் 6, காளையகவுண்டன்பட்டி

25 வது கணபதிகவுண்டர் 7, பட்டிநாடு.

27 வது சிப்பணகவுண்டர் 8, ராசிங்கபுரம் கரியப்ப[ம் பட்டி.

24 வது ராமசாமிக்கவுண்டர் 9, கீழச்சிங்கிலிச்சேரி [கோம்பை ஜமீன்.

28 வது அ. குமரவேல் கவுண்டர் 10, பட்டிநாடு
22 வது சுப்பய கவுண்டர் 11, பூதிப்புரம்.

கன்னிவாடி ஜெமீன் கசுவணம்பட்டி கிராமம் குரு ம்பபட்டி கெ. பாவாடை அய்யர் அவர்களுக்கு ஓட் கொடுத்த புள்ளிகளின் பெயர் நம்பர்கள்.

16 வது கரியாக்கவண்டர் 1, கொங்குநாடு.
18 வது சுப்பைய கவுண்டர் 2, புலிகுத்து.

ஆண்டிபட்டி கிராமம் கன்னியப்பிள்ளை பட்டியிலி ருக்கும் ம. கெப்பய்யர் அவர்களுக்கு அஞ்சாதினக் காரர் ஆறு கிராமக்காரர் ஆகப்பதினொரு மெம்பர்கள் ஷை யாருக்கு முதல் முதன்மை யென்று சொன்னார் கள்.

கசுவணம்பட்டி கிராமம் குரும்பபட்டியிலிருக் கும் கெ. பாவாடை அய்யர் அவர்களுக்கு ஒரு நாடு ஒரு கிராமக்காரர் ஆக இரண்டு மெம்பர்கள் ஷையா ருக்கு முதல் முதன்மையென்று சொன்னார்கள்
பாக்கி பதினேழு மெம்பர்கள் சுவாமிகள் இரண்டு பேருக்குள் முதல் முதன்மை எப்படி என்பது எங்க ளுக்குத் தெரியாது யென்று சொன்னார்கள்.

ஷை ராயகுல மகாநாடு சபையோர்கள் ஏகோபித்து ஆண்டிபட்டி கிராமம் கன்னியப்பிள்ளை பட்டியிலிரு க்கும் ம. கெப்பய்யர் அவர்களுக்கு ஓட் சாஸ்தியாய் இருப்பதாலும், கசுவணம்பட்டி கிராமம் குரும்பபட்டி

யிலிருக்கும் கெ. பாவாடை அய்யர் அவர்களுக்கு ஒட் பூச்சியமாய் இருப்பதால் ஷை நம் ராயகுலக் கவுண்டமார் மகாநாட்டுக்கு ஆண்டிபட்டி கிராமம் கன்னியப்பிள்ளை பட்டியிலிருக்கும் ம. கெப்பய்யர் அவர்களுக்குத்தான் முதல் முதன்மை பட்டக்காரர் என்றும் குலகுரு சுவாமியென்றும் ஷை சபையோர் கள் எனக்குத்தீர்ப்புச் செய்திருக்கிறார்கள்

சபையார் தீர்மானித்தவர்களின் கையொப்பம்.

1 ப சுப்பயகவுண்டர், பூ.மஞ்சிநாயக்கன்பட்டி.
2. சின்னமுத்தக்கவுண்டர், பூசாரி செந்துறை.
3. இலுப்பூர் ஆதீனம் கிரல் குரி ருமக்கவுண்டர். [இலுப்பூர்.
4. கவுண்டர், சுப்பயகவுண்டர், காளையகவுண்டன்பட்டியென்ற சுந்தருசுபுறம் போடிநாயக்கனூர்ஜெமீன்
5.
6.
7. கோ. வெ. சுந்தரக்கவுண்டர் ஊத்தாங்கால்பட்டி
8. ஸ்தானிகக் கவுண்டர், சுப்பய கவுண்டர், நாட்டுக் (கவுண்டர்.
9 கெப்பணகவுண்டர், மணியாரம்பட்டி யென்ற [குரும்பபட்டி ஆதீனம்
10. வெள்ளையகவுண்டர் அஜிஸ்டெண்டர் நாட்டுக்க [வுண்டர்
11. திருமலைக்கவுண்டர் தளவாய் செந்துறை.

12. ரு. கெப்பணகவுண்டர், அன்னஞ்சி, வடபுதுப் [பட்டி

13. வீ. மல்லையகவுண்டர் கன்னியப்பிள்ளைபட்டி

14. கிரல் ,படணக்கவுண்டர் தருமத்துப்பட்டி, போடிநாயக்கனூர் ஜெமீன்.

15. சி. சென்னப்பக்கவுண்டர். கலையம்புத்தூர் வையாபுரிநாடு.

16. கிரல் ஆ பழனியப்பகவுண்டர் ஆயக்குடி

17. சிரங்கு கவுண்டர் காழியாபுரம், வையாபுரிநாடு

18. மலையாண்டிக்கவுண்டர் காழியாபுரம்.

19. சுப்பயகவுண்டர், கைக்குரிச்சி, தொண்டமான் [புதுக்கோட்டை.

20. ஆ பழனிக்கவுண்டர், சுப்பலாபுரம்.

21. த. ஆண்டிக்கவுண்டர், மார்க்கம்பட்டி,

22. பெ. க, கிரல் சுருளியாண்டிக்கவுண்டர் ராசிங்கபுரம், போடிநாயக்கனூர் ஜெமீன்.

23. கா. க. சீ. ரெ. சிரங்குகவண்டர். கிருமமுன்சீபு [ராசிங்கபுரம் ஒக்காலியக்கவுண்டர்.

24. கொ. மல்லையகவுண்டர், மாந்தாங்குடி தொண்டமான் புதுக்கோட்டை

25. சி. சுப்பயகவுண்டர், புதூர்.

26. ரெ. வீரய கவுண்டர். பூசாரி செல்லுகுடி தொண்டமான் புதுக்கோட்டை.

27. பூசாரி பழனிக்கவுண்டர் மாங்குடி தொண்ட
[மான் புதுக்கோட்டை.
28. கிரல், ப. சிங்கபக்கவுண்டர், சங்கருபுரம் என்ற
[பெரியசாரிபுரம்.
29. ரேல், கெ. முத்தக்கவுண்டர்.
30. பழனியாண்டிக்கவுண்டர் பூசாரி, மாங்குடி.
31. கிரல் சூரக்கவுண்டர், ஆண்டிக்கவுண்டர் ஆலாம்
[பட்டி.
32. வை. சுப்பயகவுண்டர். ஒடைப்பட்டி.
33. பழனியாண்டிக்கவுண்டர் ஷெயூர்.
34. வி. கெப்பணகவுண்டர், காக்கிவாடம்பட்டி யெ
ன்ற மாரியப்பம்பட்டி.
35. சி. கட்டமல்லகவுண்டர், மேலச்சிந்திலிச்சேரி
36. கெ கெப்பணகவுண்டர் புலிகுத்து.
37. ருமசாமிக்கவுண்டர். கீழச்சிந்திலிச்சேரி.
38. கெ. மல்லிங்க கவுண்டர் ஷெயூர்.
39. சு சடைமுத்துக்கவுண்டர், எல்லைப்பட்டி.
40. பெருமாள் கவுண்டர், ஷெயூர்.
41. ம கெப்பணகவுண்டர், மேலச்சிந்திலிச்சேரி.
42. ரு. வ. தங்கமுத்துக்கவண்டர் ஒக்கிலியர் ஷெயூர்
43. சிக்கக்கவுண்டர் ஷெயூர்
45. கெ. மல்லையகவுண்டர் இராசிங்கபுரம்.
46. அ. பெருமாள்கவுண்டர். ஷெயூர்கரியப்பம்பட்டி
47. கா. சின்னச் சுருளியாண்டிக் கவுண்டர்

48. பெரிய சிக்கக் கவுண்டர்
49. சி. சு. வகைக்கி காட்டுரங்கக்கவுண்டர் தருமத்
துப்பட்டி
50. ப. பழனியாண்டிக் கவுண்டர், ராசிங்கபுரம்.
51. சு. அழகிரிக் கவுண்டன், வெரியப்ப நாயக்கன்
பட்டி
52. அ, தாசய கவுண்டர் எளு அன்னப்பட்டி கீரல்
53 அ. தாசயகவுண்டர், ஷை யூர்.
54. ஆலச்சக்கவுண்டர் ஷை யூர்
55. மு. ஆலச்சக்கவுண்டர் ஷை யூர்
56. ஆ. கொங்காணிக்கவுண்டர் ஷை யூர்
57. கு. கெப்பணகவுண்டர் ஷை யூர்
58. கணபதிக்கவுண்டர். ஷை யூர்
59. ரெ. பொம்மிநாயக்கர் ஷை யூர்
60. ப. சுப்பயகவுண்டர் அம்மாபுரம்
61. சு. சுருளியாண்டி செட்டியார், எளு அன்னம்
[பட்டி
62. ம. அரசப்பத்தேவர் ஷை யூர்
63. அ, செ, ப, சுருளியாண்டி செட்டியார்
64 சு, காமாக்ஷித்தேவர், எளு அன்னம்பட்டி
65, வா சி ருமசாமித்தேவர், ஷை யூர்
66, கெ, முத்தக்கவுண்டர் கன்னியப்பிள்ளைபட்டி
67, க, பிள்ளக்கவுண்டர் ஷை யூர்
68, பூசாரி சுப்பயகவுண்டர், ஷை யூர்

69, ம, பழனிவேல் கவுண்டர், ஷெ யூர்
70, தொடுமல்லுக்கவுண்டர் ஷெ யூர்
71. வி, க, பெருமாள்கவுண்டர் ஷெ யூர்
72, எ, மாரிமுத்துக்கவுண்டர், ஷெ யூர்
73. சு, சுப்பயகவுண்டர், ஷெ யூர்
74. பெ க வெள்ளையகவுண்டர், ஷெ யூர்
75 அ. சின்னக்கவுண்டர் ஷெ யூர்
76. பெரியவெள்ளையப்பன் ஷெ யூர்
77. சீரல் வெ. அழகிரிக்கவுண்டர் ஷெ யூர்
78. இ. காமாக்ஷிக்கவுண்டர் இராசிங்கபுரம்
79 ம. பழனியாண்டிக்கவுண்டர், கரியப்பம் பட்டி.
80. த. முத்தயக்கவுண்டர் இராசிங்கபுரம்.
81. அ. கெ. திப்பணகவுண்டர். இராசிங்கபுரம் கரி[யப்பம்பட்டி.
82. க. சுப்பய கவுண்டர் கன்னியப்பிள்ளை பட்டி.
83. பால வெங்கிட்டு சுப்புக்கவுண்டர், ஒக்கிலியர் கன்னியப்பிள்ளை பட்டி.

ஆண்டிபட்டி கிராமம் கன்னியப்பிள்ளைபட்டியிலிருக்கும் ம. கெப்பய்யர் அவர்கள் அனுப்பிய எரு அன்னம்பட்டியில் நாம் ஏர்ப்படுத்திய மீட்டிங்கியின் தீர்ப்பும் நம் குலத்தவர்கள் தவருது நடக்கும் குலத்தின்நடபடிக்கையின் விபரமும் என தன்புள்ளசிஷ்யர்களாகிய யாவரும் இப்புஸ்தகத்தில் சொல்லியிருக்கிற விபரப்படி நம் ஜாதி மேம்படுவதற்காக தவாரது

நடந்து கொள்வீர்களாகவும்.

பத்திரகாளியம்மன் துணை மகாலெக்ஷிமியம்மன் துணை

அகில இந்திய ராயகுல மகாநாடு இந்திய ராயகுல அபிமானமுள்ள எனது சிஷியர்களுமாகிய ஒவ்வொரு ராயகுலத்தவரும் நமது வகுப்பினர்களுக்கு நூதன ஆவேஷத்தை உண்டாக்கக் கூடியதும் நமது ஜனங்களை ஒற்றுமையாக்கக் கூடியதும் புதிதாகக் கூடினதுமான இம் மகாநாட்டைப்பற்றி அடிக்கடி கவனிக்காமலிருக்க முடியாது.

இந்த மகாநாட்டின் விஷயங்களைப்பற்றி கவனித்ததில் நமது ராயகுல கனவான்களே இந்தியாவில் எத்தனையோ ஜில்லாக்களில் நாம் இருக்கிறோம் இருந்தும் இம் மகாநாட்டைப்பற்றி கவனிக்க வேண்டியது அவசியம் வன்னியகுல சங்கம் கம்மகுல மகாஜன சங்கம் நாடார் மகாஜன சங்கம் இன்னம்எத்தனையோர்ஜாதி சங்கங்களில் ஒடுக்கப்பட்டவர்களில் ஆதி திராவிடர்கள் சங்கம் தேவகுல வேடுவர்கள் சங்கம் தேவேந்திர குலாதிபர்கள் சங்கம் முதலிய சங்கங்கள்முன்னேற்றமென்ற குறிவைத்துக்கொண்டு ஊக்கத்துடன் உழைத்துமுன்னேறிச்சென்று கொண்டிருக்கின்றன மேற்கண்ட சங்கங்களின் அபார வேலைகள் போற்றத்தக்கதே

இராய குலத்தவர்கள் கிராமங்களில் என்னிலைமையிலிருக்கிறார்கள் என்றுகவனித்தால் அவர்களின்

கல்வி ஒழுக்கம் கைத்தொழில் செல்வநிலை முதலிய வைகளைப்பற்றி நன்கு ஆராய்ந்தால் குல அபிமானப் பெருக்குள்ள உங்கள் ஒவ்வொருவருக்கும் உதிரவரு த்தத்தால் உஷ்ணமடைந்து கொதிக்கும் நீங்கள் கதறிக் கதறி அழுவீர்கள் கண்ணீர் வடிப்பீர்கள் நம் குலத்தவர்கள் நடக்கும் நன்மை தீமை விஷயங்களை ப்பற்றி சொல்ல இங்கே இடம் போதாது.

ஆண்டவர் என்று சொல்லப்பட்ட லோகபரமா த்மாவாகிய ஸ்ரீ கிருஷ்ணபகவானுடைய அல்லது ஸ்ரீ மகாவிஷ்ணுவினுடைய வழிவழி வந்த நீங்கள் மகோ ன்னத குருபீடம்பெற்று எல்லாவிஷயங்களிலும் உ யர்வு பெற்று நல்வழி அடையவேண்டிய நீங்கள் ஒ ற்றுமை குலைந்து அபிமானம் குறைந்து தரித்திரத் தால் வதங்கி மிக்க கேவலமாக வாழ்கின்றீர்கள். இ தை நினைக்கும்போது ஐயோ பரிதாபம்.

மனிதப்பிரவியெடுத்தது யாது பயன் நாம் மா ண்டு மண்ணாகப்போகவா பிறந்தோம். உண்டு உடுத் தி உறங்கவா பிறந்தோம்.. அன்று அன்று நன்றாய் ஆலோசித்துப்பாருங்கள் அகில இந்திய இராயகுல மகாநாடு உங்களை மேலானபதவிக்குக் கொண்டுபோ கத்தோன்றியிருக்கிறது. அது உங்களைத் தட்டித் த ட்டி விழித்துக்கொள்ளுங்கள் ஊக்கத்துடனும், ஆக் கத்துடனும் விடாமுயர்ச்சியுடனும் வேலை செய்யுங் கள். வேலைக்குத்தக்க கூலியுண்டு என்பதை மறவா தீர்கள் முதலில் துன்பம் முடிவில் இன்பம் என்ப தை நினையுங்கள்.

கும்பிடப்போன தெய்வம் குறுக்கே வந்ததை போல் நினைத்து உங்கள் குலத்திற்காக உங்கள் கடமைகளைச்செய்ய முன்வராவிட்டால் நீங்கள் எப்பொழுது செய்யப்போகிறீர்கள். நம் குலத்தவர்களுக்கு விவேகிகளே உழைப்பதற்கு இது ஏற்ற காலம் போனதுபோகட்டும் கூடிய சீக்கிரத்தில் நம் இராயகுல மகாநாட்டைச் சிறப்பிக்க முயலுங்கள். தாங்கள் எல்லோரும் இம்மகாநாட்டைச் சீக்கிரத்தில் செல்வர்களே நடை பெறும்படி செய்தால் ராயகுல உலகம் தங்கள் எல்லோரையும் என்றுமே மறவாது.

ஆனால் மகாநாட்டின் விஷயங்கள் மெதுவாய் இருக்கின்றன மனிதன் தன்னைச் சீர்ப்படுத்திக்கொள்வதும் கெடுத்துக்கொள்வதும் அவனவன் வசமேயிருக்கிறதுபோல உங்கள் முன்னேற்றம் உங்கள் வசமே இருக்கிறது. வேலையன்றி கஷ்டமின்றி நீங்கள் மேலான எதையும் எதிர்பார்க்கமுடியாது. நீங்கள் முயர்ச்சி செய்தால் மகாநாட்டின் காரியங்கள் மிக்க தீவிரமாக நடைபெறும் ஒற்றுமையாய் இருப்பதற்குக்காலம் வந்துவிட்டது ஒற்றுமையாய் இருங்கள் வேலைசெய்வதற்கு காலம் வந்துவட்டது வேலைசெய்யுங்கள் நன்றாய்த் தியாகம் செய்யுங்கள் உங்கள் விவேகம்பெருக கல்விபெருக ஒற்றுமைவலுக்க கைத்தொழில்கள் ஆடுமாடுவிர்த்தியாக வறுமைநீங்க நாகரீகம் ஓங்கசெல்வமும் தனபாக்கியமும்பெருக நீங்கள் இம் மகாநாட்டைச் சீக்கிரத்தில் சிறப்பிக்கநடத்தி மேன்மையடையுங்கள் மேன்மையடையுங்கள், என்

பிரியமக்களேஎன்றுநம்குலஸ்ரீ மகாலெக்ஷிமியம்மன் இமைமிட்டு உங்களைக்கூப்பிடுகிறாள். அவ்வன்னையின் தெய்வீக மொழிகளைக்கேளுங்கள் கேளுங்கள்.

பிறநாட்டினர்களைப்போல் ஜாதி வித்தியாசமின்றி காதலின்வலியால் தம்தம் இஷ்டத்திற்கேற்றவாறு மணந்து கொள்ளும் வழக்கம் நம்முள் உண்டோ அப்படியாயின் அதில் மானம் அபிமானம் குல அபிமானம் வேண்டியதில்லை, கட்டு திட்டம் வேண்டியதில்லை, மிருகங்களைப்போல் காமவெறி யிருக்கும் வரையில் குடும்ப வாழ்க்கைபட்டு, காமவெறி நீங்கியதும் மனஸ்தாபப்பட்டு துரும்பு கொடுத்து நம் குலாச்சாரம் இடம்கொடுக்குமா நம் வாழ்க்கையும் நம் குலநடபடிக்கையும் கடவுள் சம்மதியின்பேரிலும் சத்தியத்தின் பேரிலும் சிறந்தகட்டுப்பாடுகளின் பேரிலும் ஸ்தாபிக்கப்பட்டிருப்பதால் நம்முள் ஒவ்வொருவருக்கும் இன்றி யமையாததாய் இருக்கிறது.

நம் குடும்பத்தின்பேரில் அபிமானமற்ற மக்கள் இல்லை தம் தம் சுயநலத்தைக் கருதி குலாபிமானமுள்ளவர்களாய் இருக்கக் கடமைப் பட்டவர்களாய் இருக்கிறார்கள். ராமன் ஆண்டாலென்ன ராவணனாண்டாலென்ன என்ற உணர்ச்சி பெரும்பாலோரான நம்மவர்களுக்கு ஒவ்வொரு காரியத்திலும் உண்டு மானம் வெளியே போகிறதென்றால் அபிமானம் எங்கிருந்து ஓங்கப்போகிறது. முதலுக்கே மோசமென்றால் வட்டிக்கணக்குப்பார்த்தால் போலிருக்கிறது.

குல அபிமானத்தை ஒக்கச் செய்வது எப்படி அவரவர்கள் வீட்டில் பேசிக்கொண்டிருந்தால் ஜாதி மூன்னேற்றததிற்கு வருமா அது விருத்தியடையுமா இல்லை ஒவ்வொருவருடைய அபிப்ராயத்தை வெளியிடவும் குறைகளைக்காணவும் வசதிஎற்படுகிறது. இதனல் அசதி எற்படுகிறது. இதனல் குலமக்களுக்குள், ஒற்றுமை நட்பு அபிமானமுதலியன எற்படுகிறது ஒரு காரியத்தைச் செய்யவோ ஒரு அபிப்ராயத்தை பரவச்செய்யவோ இவைகளுக்கு நம் குலத்தவர்கள் பேருதவியா யிருக்கின்றனர்.

கெட்டவன் என்ற பதத்துக்குக் கெடுதியைப்பிசருக்குச்செய்பவன் என்னலாம். கெட்டவன் பாதகன் துஷ்டன் கொடியவன் தீயவன் துர்ச்சனன் என பன ஒருபொருளையே குறிபாநிற்கும் கெட்டவனுக்கு நேரான எதிர் குணத்தானுகவேண்டுமானல் மிக நல்லவனே தேர்ந்த எதிர்யாவான் நல்லோர்களுடைய செவிகள் தீயவனுடைய வார்த்தைகளைக் கேட்பதற்கென்றால் நல்லோர்களுக்குச்செவிடாக மாறிவிடுகின்றன நல்லோர் மேல் கண்டவர்களை நஞ்செனவே எண்ணுவர். அப்பாதகனுடன் பேசுவதென்றால் நல்லோர்கள் நரகத்தைக் கண்டாலொப்ப விசாரம் கொள்கின்றார்கள். மேல்கண்டவர்களை யாவருங் கொடிய நஞ்சென எண்ணுவர். அவனுடைய நடபடிக்கைகள் உலகத்தாருக்குப்பிடியாது கொடுமையே செய்யப்பழகியதீயவனுக்கு நல்லோர்களைப்பற்றியகவலை யேன் உண்டாகப்போகிறது, கொடி

யவனுக்கு ஆபத்துவந்தகாலத்தில் நல்லோர்கள் அவனிடம் அணுகவுமாட்டார்கள். சத்தியம் தவருத நம் குலத்தவர்களில் இப்படிக்கொடிய பாதகர்கள் குலத்திரோகம் குடித்துரோகம் குருத்துரோகம் செய்பவர்களாகிய நினைப்பவர்களாகிய கொடிய பாதகர்களாகிய கொடியவன் தீயவன் துர்ச்சனன் இப்பேர்பட்ட பாதகர்களை கண்டிப்பாய் கடவுள் தண்டனைக்குப்பாத்திரமாவார்கள்.

நம் ராயகுலக்கனவான்களே நம்குலத்தவர்கள் வசிக்கும் ஊர் காரியதரிசிகளே விவேகிகளே தங்களுக்கு அடுத்த கிராமங்களில்ச்சென்று நம்மவர்கள் எவ்விதம் இருக்கிருர்கள் என்ன நடத்துகிருர்கள் எவ்விதமொழில் நடக்கின்றது என்று பார்த்து அவர்களை நேசித்து பூசித்துப்போதியுங்கள் சீர்திருத்தம் செய்யுங்கள் அவர்களுடைய அன்னம்பெற்று அங்கு புசித்து அன்று தங்கி அடுத்தநாட்காலையில் அடுத்த கிராமங்களுக்குச்செல்லுங்கள். அவ்விதமே போதியுங்கள் இவ்வாறு கிராமங்கள் முற்காலத்திலும் மத்தியகாலத்திலும் மிக்க உன்னித நிலையடைந்திருந்தபோதிலும் இப்போழ்து கிராமங்கள் என்னிலைமையிலிருக்கின்றனவென்று கவ்னித்துபாருங்கள் அவைகளின் தற்கால ஸ்திதியைக்கவனித்தால் உள்ளம் வருந்துகிறது உடல் நடுங்குகிறது நம்மவர்கள் செய்யும் தொழில்களெல்லாம் சீர்குலைந்துவிட்டன ஜாதி வரன்முறை தவரிவிட்டது மிகவும் சிரமத்துடன் வேலைசெய்துகொண்டிருக்கிருர்கள் கூலிவேலை

கள் கிடைக்காமல் நகரங்களையே நாடிச்செல்லுகின்றார்கள் ஆங்கிலம் வாசித்தவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்கள் குமாஸ்தாக்களாகப் பலவிடங்களுக்குச்செல்லுகிறார்கள் இவ்விதமாய் கிராம வாழ்வு சிதைந்துவிட்டதின் பயனாக விவசாயம் மற்றெல்லாத்தொழில்களையும் நன்கு கவனிக்கப்படுகிறதில்லை

கிராமவாசிகளே! தங்களுடைய வாழ்க்கைமுறையைமாற்றிச் சிதைத்துக்கொண்டீர்கள். கிராமங்களில் சண்டைச்சச்சரவுகள் பெருத்துக்கொண்டுவருகின்றன. சன்மார்க்கம் அழிந்துகொண்டுவருகின்றது. கெட்டபழக்க வழக்கங்களாலும் பொறாமை துவேஷம் வீண் மனஸ்தாபங்கள் முதலியவைகள் அதிகமாகிக்கொண்டுவருகின்றன. ஏனெனில் ஒற்றுமையின்மையே உண்மை நிலைமையாகி அற்பவிஷயத்திற்கும்கூட ஆக்ரமித்து ஒரு கிராமத்தில் இருவருக்குள் மனஸ்தாபமேற்பட்டுவிட்டால் கிராமத்தையேபிரித்து இரண்டு கட்சிகள் உண்டாக்கிவிடுகிறார்கள். கிராமத்தையே இவ்வித பலவழிகளில் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இன்னும் பலவித இடையூறுகளையும் செய்கிறார்கள். இப்பேர்ப்பட்ட பாதகர்களையும் துஷ்டர்களையும் இவர்களுக்கு எப்போது கெட்டகாலம் இக்கொடியவர்களை எப்போது கடவுள் தெண்டிப்பாரென்று பெரியோர்கள் கடவுளைப் பிறார்த்தித்துக்கொண்டிருக்கின்றார்கள்.

கனவான்களே! நம் ஜாதி விஷயமான காரியங்களைப்பற்றி விசாரித்து சீர்திருத்தம் செய்யவேண்

டும் நாம் எப்போதும் ஒருவருக் கொருவர் பிரி
வினை என்பதை நினைக்காமல் குரங்கென்றால் மூகம்
ஒன்று என்ற வாக்கியம்போல் அவ ரவர்களுக்கு
வந்த நல்வினை தீவினை வேறு எவ்வித காரியமானபோ
திலும் உனக்கென்ன எனக்கென்ன வென்று நினைக்
காமல் இவ்வித காரியம் ஒருசமயத்தில் ஏற்பட்டால் இப்
பேர்ப்பட்ட காரியம் நம் குலத்தவர்களுக்கெல்லாம்
என்று ஒன்று போல் நினைத்து முக்கியமாய்க் கவனி
க்கவேண்டியது அவசியம்

இவ்வித மெல்லாம் சொல்லியிருக்கிறதே
நாம் கேட்கிறதா இவருக்குத்தான் கடவுள் எல்லா
அவயவங்களை உண்டுபண்ணி இருக்கிறார் நாம் அவ
ரைப்போல்தான் இருக்கிறோம் நாம் உள்ளபடி
பார்ப்போம் சங்கதிகளைச்சொல்வோம் நாமென்ன
இவர்களுக்கு தாழ்ந்தவர்களா என்றுநினைக்கிறது
எல்லாருமானிடர்களா ஆவரோ என்ற வாக்கியத்
தைக்கேட்டும் நாம் இப்படி நினைப்பது கூடாது
நமக்கும் நம் குலத்தவர்களுக்கும் நல்லகாலம் பிற
ந்துவிட்டது துன்பம் ஒழிந்து இன்பம்விளைந்தது
என்று கவனித்து நம்ஜாதி முன்னேற்றத்திற்கு
கொண்டுவரவேண்டிய முயர்ச்சியை ஒவ்வொருவ
ரும் முக்கியமாய்க்கவனிக்கவேண்டும்.

ஆகயால் நண்பர்களே உலகம் உங்களிடத்தில்
இருக்கிறது நீங்கள் உலகத்தைக் காப்பாற்றவேண்டு
மானால் சண்டை ஒழியவேண்டும் சமாதானம் பாவ
வேண்டும் அகங்காரம் அழியவேண்டும் அன்பு தது

ம்பவேண்டும் பொருமை பெருகவேண்டும் புண்ணி யம் நிலைக்கவேண்டும் சோம்பல் அகலவேண்டும் சுருசுருப்பு விர்த்தியாகவேண்டும் வேற்றுமை விலகவேண்டும் வினைநீங்கவேண்டும் நாம் சோம்பேரியாய் பயங்கொள்ளிகளாய்த் தூங்கிக்கிடந்ததின் பயனாக உண்ண உணவின்றி உடுக்க உடையின்றி படுக்க இடமின்றி பாய்க்கு விதியின்றி கஞ்சி வருதப்பா என்றுல் எங்கே வருதப்பா என்று எதிர்பார்க்கும் காலம்வந்துவிட்டது நாம் இதை விலக்கி நல்வழி தேடவேண்டும்.

நம் குலஅபிமானிகளே நம் ராயகுல ஒற்றுமைக்காகவும் நம்குலத்தவர்கள்உயர்வு அடைவதற்காகவும் கன்னியப்பிள்ளை பட்டி நமது குலகுரு சுவாமியவர்களாகிய மகா-ள-ள-ஸ்ரீ ம. கெப்பய்ய குருசுவாமிகள் ஏற்படுத்திய நாளது குரோதன ஹ அற்பசி மீ 10 உ யன்று ஏற்படுத்திய மீட்டிங்கியில் ஷை 12ம் உ ராத்திரி சுமார் 11, 12 மணி சுமாருக்கு மேற்கண்ட குரு சுவாமியவர்கள் ஷை ராயகுல மகாநாடு சபையோர்களைப் பார்த்து எனது அன்புக்கினிய சிஷ்யர்களே எங்களைப் பாதுகார்க்கும் பொருமையுடையவர்களே மேலான பதவி யடைக்கூடிய எனக்கின்பமுடையவர்களே இதுமகாநாடு நிறைந்தசபை தேவசபை நமக்கன்னையாம் ஆதி மகாலெஷ்மியம்மன் சபைஇச்சபையில்எனதுசிஷியர்களேநம்ஜாதி விஷயமானசமாசாரங்களைப்பேசவேண்டியிருந்தாலும்கேழ்க்கவேண்டியிருந்தாலும்சத்தியம்தவருதீர்கள் பொய்

சொல்லாதீர்கள். இல்லாததை இருக்கிறதென்றுபேசாதீர்கள் ஞாயத்தை அனுசரியுங்கள் என்று நம்மகாசபையோர்களுக்குச் சொன்னநிமித்தமே சபையில் யாராவது குருசுவாமி சொல்வதற்குமுன் எவ்விததாருமாறான வார்த்தைபேசநினைத்திருப்பார்களே யல்லது சபையைச்சிலர் உலைவினம் செய்ய எத்தனித்திருப்பார்களோ அல்லது எவ்விதக்கெடுதல் செய்ய சபையைச் சிலர் குரு சுவாமி சொன்னதின் பின் என்ன நினைத்தார்களோ அதை யாவர் கண்டுபிடிக்கப்போகிறார்கள். இப்படிக் கபடமாகிய கெட்ட எண்ணங்கொண்டவர்களைக் கண்டுபிடித்து இவர்கள் வைத்திருக்கிற கெட்ட துவேஷத்தை நீக்கட்டும் இவர்கள் உள்ளத்தில் வைத்திருக்கிற பாதகரமான வார்த்தை பஞ்சாயத்தில் சொல்லப்போகிற பாதகர்கள் தெறிந்துகொள்ளட்டும், சபையில் குருசுவாமி ஞாயத்தைச் சொல்லியிருக்கிறார் சபையில் சிலர்கெட்ட எண்ணம் வைத்துக் கொண்டிக்கிறார் என்று நமக்கு அன்னையாம் ஆதிஸ்ரீமகாலெக்ஷிமியம்மன் அதேசமையம் மகாசபையில் எரிந்துகொண்டிருந்த காந்த லேட்டை அவிழ்தியும் அச்சபையில் அசரீரியாக இச்சபையில் யாராவது பொய் சொன்னவர்கள், பொய் சொல்ல ஆரம்பித்தவர்கள், பஞ்சமாபாதகமாய்ச்சொல்ல நினைத்தவர்கள், சத்தியம் தவறினவர்கள் ஜாதிஒற்றுமையைக் கெடுக்கநினைத்தவர்கள் சபையில் பேசி முடித்த காரியத்தை உலைவினம் பண்ண நினைத்தவர்களுடைய குடும்பமும் அவன் குலமும் அவன் கோத்திரமும் சபையில் எரிந்துகொண்டிருந்த காந்தப்

பிரகாசம் எப்படி இருளடைந்ததோ அப்படி யவன் குடும்பம், குலம், கோத்திரம் கெட்டுப்போய்விடுமெ ன்று ஸ்ரீ மகாலெக்ஷிமியம்மன் சபையில் காக்ஷி கொ டுத்ததைக் கண்ணால் பார்த்தும் பின் ஒவ்வொருவரு ம் தாறுமாறாய்ப் பேசவும் கெட்டகாரியத்தைச்செய் யவும் நினைத்த அல்லது ஆரம்பித்த வாலிபர்களே வீணாய்க்கெட்டுப்போகாதீர்கள், கெட்டுப்போகாதீர் கள், இது அனியாயம், அனியாயம் என்று ஸ்ரீ மகா லெக்ஷிமியம்மன் ஓலமிடும் சப்தம் உங்கள் காதுக்கெ ட்டவில்லையா லெக்ஷிமிபுதல்வர்களே பெற்றதாய் த ட்டி எழுப்பியும் தூக்கம் விழிக்கவில்லையா மானம் குலஅபிமானம் குடும்ப அபிமானம் ஏதேனும் உங் களுடைய உதிரத்தில் ஓடிக்கொண் டிருக்குமானால் இவ்வித எடுப்பெடுக்க மாட்டீர்கள். இச்சமயத்தில் முன் வருமலிருக்க மாட்டீர்கள். அன்னையாம் மகா லெக்ஷிமிதேவி எனது புத்திரர்களே யான் உங்களு க்காக ராயகுலகுருவாக ஏற்படுத்தியிருக்கும் கன்னி யப்பிள்ளைபட்டி ம. கெப்பய்யகுருசுவாமியை பணி யுங்கள் அவர் சொற்படி கேட்டு கடவுங்கள் குரு சு வாமி பூசை மறவாது செய்யுங்கள் உங்களுக்கு யா தொரு குறைவும் வராது செல்வமும் தனபாக்கிய மும் மேன்மேலும் விருத்தியடையும் உங்கள் குலம் கோத்திரமும் தீர்க்காயுள் பெற்று நீடுழிகாலம் வா ழ்ந்திருப்பீர்கள் என் புதல்வர்களே, என் புதல்வர்க ளே யான் சொல்லும் வாக்கியத்தை மறவாதீர்கள் மறவாதீர்கள்.

உ

1925 ஹு அக்டோபர் மீ 26 உ க்குத்தமிழ் குரோதன ஹு அர்ப்பசி மீ 10 உ திங்கட்கிழமை தினம் அகிலஇந்திய நம் ராயகுல மகாநாடு நம் குல முன்னேற்றத்திற்காகவும் ஒற்றுமைக்காகவும் நம் ராயகுல குருசுவாமி அவர்களாகிய ம. கெப்பய்ய சுவாமி அவர்களும் நம்ராயகுல மகாநாடு சபையோர்களும் ஷை உ யன்று விருவிப்பட்டி கிராமம் ஏழு அன்னம்பட்டியில் யேற்படுத்திய மீட்டிங்கியில் அடியிற் கண்ட விபரப்படி நடந்து கொள்ள வேணுமென்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறார்கள்

நம் ஜாதி முறைப்படி பெண்ணைக் கேட்டு நம் ஜாதியில் கல்யாணத்துகரு பெண்ணுக்கு நிசூயதாம்பூலம் நடத்தும்போது பெண்ணுக்குப் பரிசம் ரூபாய் 35—0—0 ம், சேலை 1 ம்,ரவிக்கை 1, பூ வெத்திலைபாக்கு மகாலெக்ஷிமியம்மனுக்கு காணிக்கை ரூபாய் 2—0—0 இந்த சாமான்களை மாப்பிள்ளையிடம் வாங்கி ஜாதியார்கள் சரிபார்த்து நிச்சய தாம்பூலம் நடத்திக் கொடுக்கவும்.

தீர்வையானபெண்ணை இரண்டாவது விவாகம் செய்யவேண்டியதிருந்தால் பரிசம் ரூபா 17–8–0 யும் ஜாதிக்கு ஊர் விருந்து நடத்தி விவாகம் செய்ய வேண்டியிருக்கிற தல்லவா ஷை விருந்தை நிறுத்தி விருந்துப்படி ரூபாய் 7—0—0யும் மாப்பிள்ளையிடம் ஜாதி பொதுப்பண்டுக்காக பெற்றுக்கொண்டு ஜா

திஷேடியானுக்கு விவாகம்நடப்பிக்கவேண்டியது.

நம்ஜாதியில் முதல் விவாகம் நடக்கும்பொழுது நம்ஜாதி உரன்மூறை விருந்து 3, சாலிக்கிருகை 60ம் நம் முன்னேர்களால் ஏற்படுத்தி நடத்தி வந்திருக்கிறார்கள் ஷேடி கிரிகை தவருது நடத்திக்கொள்ளவும், ஜாதிக்கு ஏற்பட்ட விருந்து மூன்றில் ஒரு விருந்தை மட்டும் ஜாதிக்குப்போடும்படி செய்து 2 விருந்தை நிறுத்தி விருந்து இரண்டுக்கு ஜாதிப் பொதுப்பண்டுக்காக ரூ 10 ம் ஜாதியார் பெற்றுக்கொண்டு ஷேடி விவாகத்தை ஜாதியார் நடத்திக்கொடுக்கவும்.

ஷேடி கிரிகைகளை நடத்துவதற்காக மாப்பிள்ளை வெத்திலைக்கட்டு 1, அரைப்படி பாக்கு கொண்டு வந்து நம்ஜாதி உரன்முறை சபையில் வைத்து ஷேடி கிரிகைகளை நடத்துவதற்காக நம்குல ஸ்ரீமதகுருசுவாமியும் ஜாதியாரும் சேமிக்கும் புள்ளியைக் கொண்டு ஜாதியார் உத்திரவின்பேரில் ஷேடி கிரிகைகளை நடத்திக்கொள்ளவேண்டியது.

விவாகம்நடந்தமேல் ஜாதியைக்கண்டு உத்திரவு பெற்றுக்கொள்வதற்காக மாப்பிள்ளைவெத்திலைக்கட்டு ஒன்று கூலிப்படியால் மூன்று படி பாக்கும் பெண்ணுக்கு அரைக்கட்டு வெத்திலையும் ஷேடி படியால் 2 படி பாக்கும் ஜாதியில் கொண்டுவந்து வைத்து ஜாதியாரால் உத்திரவு பெற்றுக்கொண்டு போக வேண்டியது.

மாப்பிள்ளை வீட்டுக்காரர் பெண் வீட்டுக்காரர்களுக்கு கொடுக்க வேண்டிய சீர் வரிசைகள்:—

பாக்குப் படி 7, வெத்திலைக்கட்டு 1, கருப்புக்கட்டி வட்டி 14, அரிசிபொரிமா படி 7, வெள்ளைப்பூடு7 சுக்கு 7, மஞ்சள் 7, சீரகம் படி மாகாணி, மிளகு படிமாகாணி மாமியார் சேலை1, இந்த சாமான்களைமாப்பிள்ளை ஜாதியார்கள் முன்னிலையில் கொண்டுவந்து வைத்து ஜாதியார்கள் சரிபார்த்து பெண் வீட்டுக்காரர்களுக்குக் கொடுத்துவிடவும்.

ஜாதியாரால் ஏற்படுத்திய கல்யாணகிரிகை சர்ஷிபிடித்தவர் கல்யாணக்காரரால் கிடைக்கும் வரவை ஜாதிக்குக்கொண்டுவந்து கொடுத்து சுவாமியும் ஜாதியும் சரிபார்த்து ஜாதியாரால் கொடுக்கும் வரவைப் பெற்றுக்கொண்டு போகவேண்டியது.

நம் ஜாதியில் பெண்களுக்கு மாராப்புக் கிரிகை நடத்தினால்ஜாதிப்பொதுப்பண்டுக்காகரூபாய்1-0-0 கொடுத்து ஜாதி கொடுக்கும் கெடுவின்பேரில் வழக்கம்போல் செய்துகொள்ளவேண்டியது.

நம் ஜாதிப்பொது விஷயமான கூட்டத்தில் வேறு ஜாதிக்காரரை வைத்து விவகாரம் பேசக்கூடாது

நம் ஜாதிப் பொது விஷயமான காரியங்களை விசாரிப்பதற்காகவும் அல்லது ஒருவன் குறை சொல்வதற்காகவும் நம்மவர்கள் விசாரிப்பதற்கு ஜாதில் கூட்டம் நியமிக்க வேண்டியிருக்கிற தல்லவா இதற்கு

அவ்வூர் கட்டியனுவது வெள்ளவரிக் கவுண்டராவது கவுண்டராவது குடிகளுக்குத் தெரியப்படுத்திக்கொள்ள வேண்டியது. விடுகள்தோறும் கூட்டத்திற்குச் சொன்னமேல் வருதவர்களிடம் காலணு வசூல்செய்யப்படுவார்கள். கூட்டத்தில் வந்து தூங்கக்கூடாது ஏதேனும் ஆப்த அவசரமாயிருந்தால் கூட்டத்திலாவது அல்லது பெரியதனக்காரஸரயாவது கேட்டுக்கொண்டு போகவேண்டியது.

நம் ஜாதியில் கல்யாணத்துக்கு நிச்சயதாம்பூலம் செய்தவுடன் மாப்பிள்ளை விட்டுக்காரும் பெண் வீட்டுக்காரும் கல்யாணத்துக்குமுன் பருப்புசோர் என்ற விருந்து ஊருக்கு நடப்பிக்க வேண்டியது.

முதல் விவாகமாகி தீர்வையான பெண்ணை பின் விவாகம் செய்யவேண்டியிருந்தால் எத்தனை தபால் தீர்வையானுலும் எத்தனை தபால் விவாகம் செய்தாலும் பரிசம் ரூபாய் 17—8—0 கொடுத்து விவாகம் செய்துகொள்ள வேண்டியது.

பெண்தீர்வை செய்யவேண்டியிருந்தால் ஆணுவது பெண்ணுவது தீர்வை செய்துகொள்ள வேணுமென்றல் உடனே அவ்வூர் கவுண்டரிடம் சொல்ல வேண்டியது. கவுண்டர் இல்லாதபோனல் வெள்ள வரிசிக்கவுண்டரிடம் சொல்லி வெள்ளவரிசிக் கவுண்டர் கவுண்டர்எவ்விடமாவதுபோயிருந்தால் உடனே தகவல் கொடுத்து கவுண்டரும் வெள்ள வரிசிக்கவுண்டரும் ஊர் குடிகளுக்குத் தெரியப்படுத்தி நம்

கவுண்டர் வீட்டில் கூட்டம் ஏற்படுத்தி ஷை யார்களைத்தருவித்து விசாரித்து இருவாய்தாகொடுத்து சமாதானம் சொல்லியனுப்பவேண்டியது ஷை வாய்தாவுக்குக்கட்டுப்பட்டுநடக்காமல் ஆணாவது பெண்ணாவது நான் தீர்வை செய்து கொள்ளவேணுமென்று கேட்டுக் கொண்டால் வாதியிடப் ஊருக்கும் வருகிற ஜாதிகளுக்கும் படிக்கு ஜாதி வழக்கம்போல் தீட்டம் செய்து கொண்டு அவ்வூர் கவுண்டர் பக்கத்திலுள்ள நாலு கிராமத்தவர்களுக்கு சங்கதி தெரியப்படுத்தி ஷையார்களைத் தருவித்து வைத்துக்கொண்டு தீர்வை செய்யவேண்டியது. இவ்விதகாரியங்களை பக்கத்திலுள்ள நாலு கிராமத்திற்குத் தகவல் கொடுக்காமல் தனியாய் செய்துகொள்ளக் கூடாது.

67978-

புருஷனுக்கும் பெண்சாதிக்கும் சண்டைசச்சரவுகள் வந்தநிமித்தம் இவர்கள் இரண்டுபேராய் பெண்சாதி கழுத்தில் கட்டியிருக்கும் மாங்கல்யத்தை அக்கிரமமாய் புருஷன் அத்தாலும், அல்லது அவ்விதம் பெண் மாங்கல்யத்தை அத்து புருஷன் கையில் கொடுத்தாலும் இவ்விதகாரியம் நம் ஜாதியில் செய்யக்கூடாதகாரியம் இவ்வித காரியங்களை யாராவது செய்ததாகத்தெரிந்தால் உடனே கவுண்டர் வெள்ளவாசுக் கவுண்டர் இவர்கள் இரண்டும் பேரும்ஊர் குடிகளுக்குத் தெரியப்படுத்தி கூட்டம் ஏற்படுத்திமேற்கண்ட இரண்டுபேர்களைத்தருவித்து விசாரித்து அக்கிரமமாய் செய்தவர்களிடம் ஜாதிக்

இப்படியும் ரூபாய் 10—0—0 ம் வாங்கிக்கொண்டு நம் ஜாதிவழக்கம்போல் மாங்கில்யத்தைக்கட்டி வைக்கவேண்டியது.

அபின், கஞ்சா, சாராயம். கள் வகைபரு உப்யோகப்படுத்தல், திருட்டு, விபசாரத்துவம் இவ்வித காரியங்களைச் செய்பவர்களை விசாரித்து பைசல் செய்ய வேண்டியிருந்தால் உடனே நம் குரு சுவாமியவர்களுக்குத் தெரியப்படுத்தி ஷை குரு சுவாமியவர்கள் வந்து மேற்கண்ட குற்றம் செய்தவன் இருக்கக்கூடிய பக்கத்திலுள்ள நாலு ஐந்து கிராமங்களுக்குத் தகவல்கொடுத்து ஜாதிவழக்கம் போல் தீர்ப்புச் செய்யவேண்டியது இவ்விதக் காரியங்களைப்தனியாய்ச் செய்து கொள்ளக்கூடாது. இவ்விதக்காரியங்களை எனக்குத் தெரியப்படுத்தாமல் தனி ஊர்க்காரர் செய்ததாகருசுவானால் அவ்வூர் கவுண்டரும் வெள்ளவரசுக்கவுண்டரும் குடிகளும் நம் ஜாதி கோரிய லாப நஷ்டத்திற்கு ஜவாப்பாக வேண்டியது.

நாளது குரோதன் ஹூ அர்ப்பிசி ஶ்ரீ 1 உக்கு முன்னிட்டு பருசம் ரூ. 10—8—0 கொடுத்து விவாகம் செய்துகொண்டவருனல் மாப்பிள்ளை தனக்கு பெண்சாதி தேவையில்லையென்றுல் பெண்ணுக்கு கொடுத்த பருசம் ரூபாய் 10—8—0 பத்தரையும் இழந்து ஜாதிக்கு ஏற்பட்ட படியும் போட்டு ஜாதிக்கி ரூ 25—0—0 யும் கொடுத்து மாப்பிள்ளை பெண்

ஞுக்குக் கட்டியிருக்கிற மாங்கில்யத்தை ஜாதி மு ன்னிலையில் பெண்வசமிருக்கிற தாலியை மாப்பிள் ளை வாபீஸ் பெற்றுக்கொள்ளவேண்டியது. பெண் புருஷன் தேவையில்லையென்றால் புருஷன் கொடுத் த பருசம் ரூ 10—8—0 பத்தரையும் கொடுத்து ஜாதிக்கு ரூ. 25—0—0 இருபத்தைந்தையும் ஜாதி வழக்கம் போல் படியும் போட்டு தான் கட்டியிரு க்கிற மாங்கில்யத்தை அவிழ்த்து ஜாதி முன்னிலை யில் புருஷன் கையில் கொடுத்துவிட வேண்டியது.

பெண் தகப்பன் விட்டிலிருந்து ஏதேனும் சீ தனச்சொத்துக்கள் கொண்டுவந்திருந்தால் அவ்வி த்சொத்தை பெண்ணுக்கு குழந்தைகள் இல்லாத போனுல் அச்சொத்தை இவளிடம்மாங்கில்யம்வாங் குகிறதற்கு முன் புருஷனிட மிருந்து ஜாதியார் சொத்தை வாங்கி பெண்ணுக்குக்கொடுத்துவிட்டு பின் பெண்ணினிடம் மாங்கிலியத்தை வாங்கி புரு ஷன் கையில் கொடுத்துவிட வேண்டியது. பெண் ணுக்கு வாரீஸ் இருந்தால் தாய் சீதனச்சொத்தை வாரீசிடம் கொடுத்துவிடவேண்டியது. இது மட் டும் ஏன் இப்படியென்றால், குழந்தைகளுக்கு வா ரீஸ் மாமனுய் இருக்கிறன் அதினுல் மாமன் தாய் க்குக் கொடுத்த சீதனச்சொத்தை குழந்தைகள் அனுபவிக்கிறது. மாமன் பின் குழந்தைகளே அனு பவிக்கப்போகிறதினுல்அச்சொத்தைப் பற்றி தகப் பனுக்கு யாதொருபாத்தியம் கிடையாது.

காளது குரோதன ஹூ அற்பிசி மீ 1உக்குமுன்னிட்டாவது அல்லது பின்னிட்டாவது மாப்பிள்ளை பெண்ணுக்கு பருசம் ரூ35யும் ஜாதிமுன்னிலையில் கூட்டி விவாகம் செய்துகொண்டவனானால், இவர் பெண்சாதி தேவையில்லையென்றால் பெண்ணுக்குக்கொடுத்த பருசம் ரூபாய் 35 யும் இழந்து ஜாதிக்கி ரூ 25 யும் ஜாதிக்குப்படியும் கொடுத்து மாங்கிலியத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டியது. பெண் புருஷன் தேவையில்லை யென்றால் பருசம் ரூ. 35 யும் கொடுத்து, படியும் ஜாதிக்கு ரூ. 25 யும் கொடுத்து புருஷன் கையில் ஜாதிமுன்னிலையில் மாங்கிலியத்தைக் கொடுத்துவிடவேண்டியது.

ஷை ஹூத்திற்குப் பின்னாவது அல்லது முன்னாவது தீர்வையான பெண்ணை பருசம் ரூ. 17-8-0 கொடுத்து விவாகம் செய்துகொண்டு பின் பெண்சாதி தேவையில்லையென்று புருஷன் சொன்னாலும் அல்லது புருஷன் தேவையில்லை யென்று பெண்சாதி சொன்னாலும் மேலே சொல்லி யிருக்கிற விபரப்படி ஜாதியார் பெற்றுக்கொண்டு தீர்வைசெய்துவிட வேண்டியது.

மாப்பிள்ளைபெண்ணுக்குக் கெடுதலான காரியங்களைச்செய்துகொண்டு பெண்சாதியைக் கூப்பிட்டு வைத்துப் பிழைக்காமலும் ஜாதி வழக்கம்போல் பெண்சாதி தேவையில்லையென்று ஜாதியில் தீர்வை செய்யாமலும் இருந்து பெண் வீட்டுக்காரன் ஜாதியில்

தெரியப்படுத்தினவுடன் நப்ஜாதிஞளாவது அல்லது என்னால் அனுப்பும் உத்தரவுக்காவது என் கட்டியவனாவது வந்து கூப்பிட்டவுடன் ஜாதியில் வந்து ஆஜராகி நானும், ஜாதியும் சொல்லுகிறபடி கேட்டு பெண்சாதி தேவையாயிருந்தால் உடனே கூட்டிக்கொண்டுபோய் வைத்துப் பிழைக்க வேண்டியது. தேவையில்லை யென்றால் ஜாதி வழக்கம்போல் தீர்வை செய்துவிடவேண்டியது ஒன்றுக்கும் கட்டுப்படாமல் அக்கிரமம் செய்தால் ஜாதி வழக்கம்போல் தீர்வை செய்து மாங்கிலியத்தைக் கட்டியவன் வசம் கொடுத்து வீட்டின் வாசற்படியில் வைத்துவிட்டு வருவான் அல்லது என்னிடம் அனுப்பிவிடுவார்கள் இப்பேர்ப்பட்ட அக்கிரமம் செய்தவனை ஜாதியைவிட்டு விலக்கி வைத்துவிடுவார்கள்

பெண் புருஷன்வீட்டிற்குப் போகாமலும் ஜாதி வழக்கம்போல் மாங்கிலியத்தைக் கொடாமலும் அக்கிரமம் செய்துகொண்டிருந்தால் இப் பெண்ணுக்கு வரும் லாப நஷ்டத்திற்கு புருஷன் ஜவாப்தாரியாகமாட்டான் பெண் வகையருப்பேருக்கும் மேற்கண்ட விபரப்படிக்கு ஜாதி தண்டனைக்கு உட்படுத்துவார்கள்.

நம் ஜாதியில் ஆணாவது பெண்ணாவது வேறு ஜாதியிலாவது நம் ஜாதியில் விவாகமில்லாத பெண்ணினிடமாவது சிற்றின்பவிஷயமாய் பிரவேசம் செய்தாவது அல்லது ஜாதியில் செய்யக்கூடாத காரிய

ங்களைச் செய்தாவது நீசமடைந்துபோனால் உடனே அவ்வூர் கவுண்டர் வெள்ளவரசக்கவுண்டர் குடிகள் பக்கத்திலுள்ள நாலு கிராமங்களுக்குத் தகவல் கொடுத்து தருவித்து வைத்துக்கொண்டு ஷெடி நீசமடைந்துபோனவன் வீட்டிற்கு நம் ஜாதி வழக்கம்போல் திட்டம் செய்து கொண்டு உடனே எனக்குத் தகவல் கொடுத்து நான் வந்து ஷெடி யானுக்குச் செய்ய வேண்டிய கிரிகைகளைச் செய்து வேறு ஜாதியில் சிற்றின்ப விஷயமாவது வேறு கெடுதலாவது செய்தவர்களை நம் ஜாதி வழக்கம்போல் சேர்த்துக்கொள்ளலாமென்று ஜாதி அபிப்ராய மிருந்தால் சேர்த்துக் கொள்ளலாம் ஜாதி அப்புறப் படுத்தலா மென்றால் ஜாதிக்கு அப்புறப்படுத்தி வைக்க வேண்டியது ஷெ காரியங்களை இன்னவிதம்செய்திருக்கிறதென்று உடனேநான்கிராமங்களுக்குத்தள்ளோலை அனுப்பிவிடுகிறேன். பின் இப்பேர்ப்பட்டவர்களுக்கு ஜாதியில் எவ்வித ஒத்தாசையும் செய்யக்கூடாது அப்படி எதேனும் ஒத்தாசை செய்தவர்களைக்கண்டால் அவர்களிடம் நம் ஜாதிக்கு ஏற்பட்ட நஷ்டத்தை வசூல் செய்வதுடன் ஜாதிவழக்கம்போல் தண்டனை ஏற்படுத்துவார்கள் இவ்விதக் காரியங்களை என்னை யன்னியில் செய்துகொள்ளக் கூடாது.

நம் ஜாதியில் சத்தியம் செய்யவேண்டியிருந்தால் தெளிவுபடியாவது கம்பிளி சத்தியமாவது என்னையன்னியில் செய்துகொள்ளக்கூடாது.

நம் ஜாதிப் பெண்கள் நம் ஜாதியார் வீட்டைத் தவிர வேறுஜாதிக்காரர் வீட்டில் ஜலமானம் செய்து கொள்ளக்கூடாது.

நம் ஜாதிப்பெண்கள் சந்தையில் கம்பளி கொண்டுபோய் விற்கக்கூடாது.

நம் ஜாதியில் ஆண் தீர்வைக்காவது பெண் தீர்வைக்காவது இன்னும் எவ்வித காரியங்களுக்காவது நம் ஜாதிப்படி என்று சொல்லி வாங்கக்கூடிய படியிருக்கிறதல்லவா அப்படியான்து ஜாதிக்கு அனுபவித்துக்கொள்ளுகிற படியே தவிர அவ்வூர்க்காரர்களுக்குமட்டும் சொந்தமாகமாட்டாது.

நம் குலத்தவர்களில் யாவரேனும் சாராயம், கள், கஞ்சா, அபின் இவ்விதலாகிரி வஸ்துக்களை அனுபவித்தாலும் களவு முதலியதிருட்டுத்தனம் செய்தாலும் திருட்டுச் சொத்துக்களை வாங்கினாலும் இவ்விதகாரியங்களைச் செய்யக்கூடாது. இவ்விதக் கெட்ட செய்கைகளைச் செய்தவர்களுக்கு ஜாதி வழக்கம்போல் தண்டனைக் குட்படுத்தப்படுவார்கள்.

நம் குலத்தவர்களில் ஒரு மனிதன் ஒரு பெண்ணை விவாகம் செய்து ஆண்வாரீஸ் இல்லாமல் பெண் மக்கள் இருந்து ஷெயான் பவுத்தியாய் விட்டால் ஷெயான் பெண்சாதி சொத்துக்களை உலைவீனம் செய்யாமல் ஷெ மக்களும் தானும் அன்னவஸ்திர குடு

ம்ப சம்ரக்ஷணை செய்து கொண்டு வரவேண்டியது. சொத்துக்களைத் தாறுமாறாய் செலவு செய்யக்கூடாது. ஷெ யான் பவுத்தியானதைப்போல் ஷெ யான் பெண்சாதியும் பவுத்தியாய்விட்டால் ஷெ யாருக்கு வாரீசாய் உள்ளவன் ஷெ யார்களுக்கு கைங்கருமம் கிரிகைகளைச் செய்துவிட்டு ஷெ சொத்துக்களை ஷெ கருமபாத்தியப் பட்டவனும் பெண்களும் சமனாகப் பாவித்துக்கொள்ளவேண்டியது.

நம் குலத்தவர்களில் ஒருவன் ஒரு பெண்ணை விவாகம் செய்து பின் தேவையில்லையென்று ஜாதி வழக்கம்போல் தீர்வை செய்துவிட்டால் மேல்கண்ட புருஷன் சொத்துக்கள் தீர்வையான பெண்ணுக்கு எவ்வித பாத்தியமும் கிடைக்கத்தக்கதில்லை.

ஒருவன் ஒரு பெண்ணை விவாகம் செய்து கொண்டதின்மேல் ஷெ பெண் தகப்பன் வீட்டிலிருந்து ஏதேனும் சீதனச் சொத்துக்கள் கொண்டு வந்திருந்தால் பூருவாரீஸ் இல்லாவிட்டால் ஷெ பெண் பவுத்தியானதின்மேல் ஷெயாள் புருஷன் ஷெ சீதனச் சொத்தை பெண் தகப்பன் வீட்டில் சேர்த்துவிட வேண்டியது. பெண்மக்களிருந்தால் ஷெ சொத்தை பெண்மக்களுக்குச் சேர்த்துவிடவேண்டியது. தாய் சீதனச்சொத்து ஆண் மக்களுக்கு இல்லை. ஆண் மக்கள் இல்லாமல் பெண் மக்களாயிருந்தால் பூருசொத்தை மேலே சொல்லியிருக்கிறபடி நடந்துகொள்ள வேண்டியது.

நம் ஜாதியில் பிறந்த பெண்ணை வேறு ஜாதிக்காரன் எவ்விதக் காரணத்தைக்கொண்டாவது கெடுதல் செய்வானுகில் ஷெ பெண்ணை ஜாதி வழக்கம்போல் தீர்வை முதலானதும் செய்தபின் ஷெ கெடுதல் செய்தவனுடைய பற்றுதல் நம்ஜாதியார் வைத்துக்கொள்ளக்கூடாது நம் ஜாதியில் யாசாவது ஒருவன் ஷெயானிடம் பற்று வைத்திருப்பதாகத் தெரியவந்தால் அப்பேர்ப்பட்டவனை ஜாதிவழக்கம்போல் தண்டனை ஏற்படுத்துவார்கள்.

நம் ஜாதியில் விவாகமான பெண் கழுத்தில் மாங்கிலியமில்லாமல் வெளியே புறப்படக்கூடாது.

தாய் தகப்பன் அண்ணன் தம்பி தன்னுடைய குடும்பத்தில் பிறந்தமக்களுக்கு கல்யாணமாவது மாருப்புக்கிரிகையாவது இன்னம் எவ்வித நன்மை தீமைகளையாவது செய்து கொள்கிறதுவழக்கம் ஷெ யார் பாத்தியம் ஷெயார்கள் இருக்க சின்னய்யா பெரியய்யா இன்னம் அக்கோத்திரத்தில் பிரந்தவர்களாவது கல்யாணமாவது மாருப்பிகிரிகையாவது இன்னம்எவ்விதகாரியத்தையாவது நான்தான் பாத்தியஸ்தன் என்று எவ்வித காரியங்களையும் செய்து வைக்கக்கூடாது அனுக்காவது பெண்ணுக்காவது தாய்தகப்பன் அண்ணன்தம்பி அனுமதி கொடுத்தால் அவ்விதகாரியங்களை அக்கோத்திரத்தில் பிரந்தவர்கள் செய்து வைக்கலாம் நம்குலத்தில் எத்தனையோ கோத்திரம் ஏர்பட்டிருக்

கிறது இதில் ஒவ்வொரு கோத்திரங்களுக்கு மாமி னென்றும் மச்சினனென்றுச்சின்னய்யாவென்றும் பெரியய்யாவென்றும் அண்ணன் தம்பி என்றும் சிலமுறையிருக்கிறது இவ்விதமுறையைக்கொண்டு ஷடி காரியங்களைச்செய்துகொள்ளக்கூடாது மீறி ச்செய்பவர்களை ஜாதிதண்டனை ஏற்படுத்துவார்கள்

பெண்ணுக்காவது ஆணுக்காவது கல்யா ணப்பருஷம்பிடிக்கும்போது மாருப்புகிரிகைசெய் யும்போது மாருப்புகிரிகைக்கு தாய்மாமன் சேலை யென்று கல்யாணத்திற்கு மாமன் பணம் பிடித்து கொடுக்கவேண்டி இருக்கிறதல்லவா இவ்விதகாரி யங்களை முன் நம் ஜாதிவழக்கம்போல் நடத்து கொள்ளவேண்டியது.

பாத்தியஸ்தர் ஷடி காரியங்களை நடத்துவ தற்கு கெட்ட எண்ணங்கொண்டு வாமுடியாது காரியத்தை நடத்த முடியாதென்றுசொன்னால் அப்பேர்ப்பட்டவனை உடனேஜாதிதரிவித்து விசா ரித்து ஞாயம் சொல்லவேண்டியது கேள்க்காத போனால் உன்னுடையபாத்தியம் இனிமேல்இல்லை என்று திட்டம் செய்து ஜாதியார் எந்த ஆள் கேமி க்கிறார்களோ அவரைக் கொண்டு ஷகாரியத்தை நடத்த ஜாதி திட்டம் செய்ய வேண்டியது. மீறிய வருக்கு ஜாதியர்வழக்கம்போல் தண்டிக்கப்படும்

நம்ஜாதிப்பெண்டுகள் வேறு கிராமங்களுக்கு

வேலைக்குப் போகவேண்டியிருந்தால் நம்மவர்கள் ஆண்பிள்ளைகளில் ஒருவரையாவது தன்னைக்கூட்டிக்கொண்டு போகவேண்டியது. மீறி ஒண்டியாய் வேறு கிராமங்களுக்கு வேலைக்குப் போனாலும் தனியாய் ஊர்களுக்குப் போனாலும் ஜாதியாரால் ௸டி யார்கள் தெண்டிக்கப்படுவார்கள்.

காலையிலாவது இராத்திரியிலாவது நம்மவர்கள் வீட்டில் ஆண்பிள்ளைகள் இல்லாத நேரத்தில் பெண்டுகள் வேறு பிரத்தியான ஜாதிக்காரரைத் தனியாய் வைத்து பேசிக்கொண்டிருக்கக்கூடாது காலையிலாவது இராத்திரியிலாவது வேறு ஜாதிக்காரர் வீட்டிற்கு தனியாய் பெண்டுகள் போகக்கூடாது. மீறிச்செய்தவர்கள் ஜாதியாரால் தண்டிக்கப்படுவார்கள்.

நம் ஜாதியில் ஏதேனும் ஒரு விவகாரம் ஏற்பட்டு தீர்ப்புச் செய்ததற்கு ஜாதியில் கட்டுப்பட்டு நடக்காதவர்களுக்கு ஜாதி வழக்கம்போல் மீறினவனுக்குத்திட்டம் செய்து வைப்பார்க ளல்லவா அப்படி மீறினவனுக்கு ஜாதி திட்டம் செய்து வைத்தபின் ௸டி மீறின வாரீஸ்காரர்களாகிய சின்னய்யா, பெரியய்யர், மாமன், மச்சினன், இன்னுஞ் சொந்தக்காரரும் அடுத்த கிராமங்களில் நம்மவர்கள் இருக்கும் எந்தக்கிராமமாய்இருந்தபோதிலும் அப்படிப்பட்டவனுக்கு யாதொரு ஒத்தாசையும் செய்யக்கூடாது. மீறி ஒத்தாசைசெய்கிறவர்களுக்கு

ஜாதிவழக்கப்போல் தண்டிக்கப்படும் தண்டிக்கப் படுவதன்னியில் ஜாதிக்குஏற்பட்ட நஷ்டத்தையும் வசூல் செய்யப்படும்.

ஒருவன் ஒருபெண்ணை விவாகம் செய்து புருஷன் பவுத்தியாகும்போது ஷையானுக்கு வாரீஸ் இருந்தாலும் அல்லது கெற்ப முண்டாகி யிருந்தாலும் அல்லது சுபாசமாய் இருந்தாலும், ஷைபெண் தகப்பன் வீட்டிற்குப்போக மாட்டேன் என்று சொல்லும்பக்ஷததில் தன்னுடைய புருஷன் சொத்தை தான் பவுத்தியாகும் வரை அனுபவித்துக் கொள்ளவேண்டியது இப்பெண் பவுத்தியானதின் பேரில் வாரீஸ் அனுபவித்துக்கொள்ளவேண்டியது இப்பெண் செத்ததை ரூருமாருய் செலவு செய்ததாக வாரீஸ் ஜாதியில் தெறியப்படுத்தினல் நாலும் ஜாதியும் விசாரித்து ருசுவானல் ஷைபெண்ணுக்கு அன்னவஸ்திரத்துக்கு படி கொடுத்து ஷை சொத்து வாரிசிடம் ஒப்பிவைக்கப்படும். புருஷன் பவுத்தியானவுடன் அப்பெண் வேறு புருஷனைக் கட்டிக்கொண்டால் முன்புருஷன் சொத்து இப்பெண்ணுக்கு பாத்தியதையாக மாட்டாது.

ஒருவன் ஒருபெண்ணை விவாகம்செய்தமேல் புருஷன் தனியாய் பெண்சாதியைவிட்டுவிட்டு தீவு தீவாந்தரம் போய் விட்டால் அப் பெண்ணுக்கு ஏதேனும் மிஸ்டேக்சேற்பட்டால் பெண்தகப்பன் வீட்டுக்காரர் பாத்தியயாக மாட்டார்கள் இவ்வி

தம் விட்டுவிட்டுப்போனபெண்ணை தகப்பன் வீட்டுக்காரர் தீர்வைசெய்துகொள்ள வேணுமென்று ஜாதியில் தெரியப்படுத்தினால் ஜாதியார் ஒருவருஷம் வாய்தாக்கொடுப்பார்கள். புருஷன் இருக்கும் இடம் தெரிந்தால் உடனே ஜாதியார் லெட்டர் மூலமாய் தெரியப்படுத்துவார்கள் உடனே வந்து ஆஜராகி நானும் ஜாதியும் சொன்னபடி கேட்டு நடக்க வேண்டியது. திவாந்தரம் போனவன் இருக்கும இடம் இன்னதென்று தெரியாதபோனால்ஷை பெண்ணை ஜாதிவழக்கம்போல் தீர்வை செய்து ஷையான் வீட்டிற்காவது அல்லது அவன் வாரீஸ் இடமாவது என்னிடமாவது ஒப்பிவைக்கப்படும். ஷையான் எத்தனைவருத்திற்குப்பின் வந்தாலும் மாங்கிலியம் எவ்விடமிருக்கிறதென்று வாங்கிகொள்ள பாத்தியமே தவிர தன்னுடைய பெண்சாதி என்ற பாத்தியம் இல்லை. பின் விவகாரத்திற்கு ஜாதியார் ஜவாப்தாரியாக மாட்டார்கள்.

நம் ஜாதியில் விவாகமாவது வேறு விதமான கிரிகையாவது செய்ய வேண்டியிருந்தால் அவ்வித காரியங்களை என்னிடமாவது ஜாதியார்களிடமாவது தெரிபப்படுத்தி ஷைஜாதியார்உத்திரவுபெற்றுக்கொண்டு செய்ய வேண்டியது ஷையார்களுடைய உத்திரவன்னியில் யாருவது செய்தால் ஜாதி ஷையார்களைத்தருவித்து விசாரித்து அவ்விதம் செய்தவனை ஜாதி வழக்கப்போல் தண்டித்து ஷை காரியத்தை பின் ஜாதி வழக்கம்போல் செய்து வைப்பார்கள்

ஜாதி முன்னேற்றத்திற்கும் மற்றெவ்விதக்கா ரியத்திற்கும் பொருள் இன்றியமையாததால் அத ற்கு ஒவ்வொரு கிராமத்திலும் கூட ஒவ்வொரு சபையேற்படுத்தி அந்த சபைக்கி அந்த அந்த ஊா மெம்பர்களை ஜனத்தொகைக்கித்தகுந்தவாறு 5 மு தல் 10 வரை தெரிந்தெடுத்து அவர்களைக் கொண டு அந்தந்தஊர்பொருள்வரவுக்குத் ததந்தவாறும் தானியம் வகையரு வரவுக்குத் தகுந்தவாரும் ஒரு நிரக்குஏற்படுத்தி வசூலித்து அதை அவ்வூர் ஏழைக்குடிகளுக்கு சொற்பவட்டிக்குக் கொடுத்து திரும்ப வருஷம் ஆகையரூவில் வட்டியும் முதலும் வசூலித்து கிரமத்தாருக்குக்கணக்கு ஒத்துக்கொ டுத்து அந்த ஹுவ த்துகையும சேர்த்து முன் மாதிரி செய்து பண்டு சேர்த்து வைக்கவேண்டியதாகவும் அப்படிச்சேர்ந்த துகையை நம்முடைய சொத்துக் குக்காவலாகிற தர்மமாகிற வேலியான கல்வி சுகா தாரம் ஜலாதாரம் கல்வி சாதல் நந்தவனம் கிணர் மடம் ஆலயம் முதலியதற்குதவி செய்தும் ஏழை களுக்குக்கொத்துதவியும் அன்னசாலை தண்ணீர்ப் பந்தல் பாதை செப்பனிடுதல் அதில்நிழல் டமும் த ரும மாத்தைவைத்துப் பரிபாலித்தல் முதலிய சத் விஷயங்களில் செலவு செய்தும் ஒவ்வொரு குழந் தைகளையும் கட்டாயம் படிப்புப் டிக்கும்படி செ ய்தும் ஏழைக்குழந்தைகளுக்கு சம்பளம் புஸ்தகம முதலியதற்குதவி செய்தும், அக்கல்வி குருபக்தி தேவபக்தி, ராஜபக்தி முதலியவைகளில் தேர்ச்சி யடைந்து இகபர சாதகமாம்படி செய்தும் இன்னு

ம் சொற்ப கிரிமினல் பெரிய சிவில் முதலிய கேசு கட்கேற்பட்டுப் போகவிடாமல் அந்த அந்த ஊர் மெம்பர்கள் சொல்லும் பைசலுக்குக் கட்டுப்பட்டு நடந்துகொள்கிறதென்றும் அநேக கிராமங்கள் சேர்ந்து தாலுகாசபை ஏற்படுத்தி வருஷம் ஒருமுறையாவது கூடி ஒவ்வொரு கிராமத்தின் பொருள் வரவு கணக்கு செலவு கணக்கு என்னிடம் தனிக்கை செய்வதுடன் கிராமச்சபைகளில் நியாயமாய் கிடைக்காத கக்ஷிக்காரர்களுக்கு அப்பீல் ஸ்தானமாகவும் கருதி தீர்ப்புச்செய்யவேண்டியது.

அதே மாதிரி அநேக தாலுகா சபைகள் சேர்ந்து அகில ராயகுலக் கவுண்டர் மகாநாட்டுக்கணக்கு ஒப்பிவைக்க வேண்டியது இன்னும் சுவாமிகளால் ஏற்படுத்தப்பட்ட கல்யாணத்துக்கு, மாராப் புக்கிரிகைக்கு அறுத்துக்கட்டுவதற்கு அக்கிரமமாகத்திர்க்க ஏற்பாடுபண்ணும் ஆண் பெண் அடங்கலுக்கும் வசூலிக்கும் தொகையையும், இந்தப்பண்டுக்கே சேர்த்துவிடுகிறதென்றும் இன்னும் மற்ற எவ்விதமான நிபந்தனைகள் ஞாயமானதுகளை குரு மெம்பர்கள் சொலலும் விஷயங்களிலும் நடந்து கொள்கிறதென்றும் மற்ற விஷயங்களிலும் ஜாதி முன்னேற்றத்திற் குரிய மார்க்கங்கள் அவசியமாக வுள்ளவைகளை சந்தர்ப்பத்திற்கேற்றபடி மாறுதல் செய்துகொள்கிற தென்றும், அதற்கு எல்லாம வல்ல அருள்புரிந்து நம்ராயகுல மகாநாடு முன்னேற்றத்திற்த வாவேணுமென்றும் நீடூழி வாழும்படி

கிருபை பாலிக்க வேண்டுவதாக நம் கன்னியாம் ஸ்ரீ மகாலெக்ஷிமி யம்மனைப் பிரார்த்திக்கின்றேன்.

எனது ராயகுல சிஷ்யர்களே! எனக்கு வேண்டிய குருசுவாமி தெச்சணையிருக்கிறதல்லவாஆதை முன்னோர்களால் ஏற்பட்டபடி வருஷந்தோறும் தெக்ஷணையும் கல்யாணத்துக்கு ரூபாய் 1—4—0ம் இலை பாக்குப் படியும் எனக்குச் செலுத்திவிடவேண்டியது.

நான் கிராமகளுக்குக் கூட்டத்திற்காக அல்லது வேறுவிதமான காரியத்திற்காவதுநான்வந்தால் தங்கள் முன்னோர்கள் நடத்திய வழக்கப்படி தாங்கள் நடத்திக் கொள்ள வேண்டியது.

இதில் சொல்லியிருக்கிறது தவிர பின் எதேனும் சேர்க்கவேண்டிய திருந்தபோதிலும் தவருதலானதை சேர்க்கப்படும்.

இப்புஸ்தகத்தில் சொல்லி யிருக்கிற தீர்ப்புப் படி நம் ராயகுலக் கவுண்டமார்கள் நல்லெண்ணம் வைத்து நாம் இன்னும் மேலான உயர்வடைய வேண்டுமென்று இத்தீர்ப்பு யாதொரு பின்னம் வாராமல் நடந்துகொள்ள வேண்டியது. இதைத்தவிர்த்து நடப்பவர்களும் கெடுக்க எண்ணங்கொள்பவர்களும் நமக்கன்னியாம் ஸ்ரீ மகாலெக்ஷிமியம்மனும் ஆதி குருவாக்கியத்தின்படியும்ரிஷியார்கள்காராம் பசுவைக்கொன்றபாவத்திலும்பிருமணனைகொன்ற

பாவத்திலும்எழு சிவாலயத்தை அழித்த பாவத்திலும் சிசுக்களைக்கொன்ற பாவத்தையும் அனுபவிப்பார்களாகவும்.

எனது அன்புள்ள சிஷ்யர்களே!

நம் குலத்தவர்கள் யாவரும் ஒற்றுமையாய் இருப்பதற்சம் ஒவ்வொரு இடங்களில் என்னுல் ஏற்படுத்தப்படும் மீட்டிங்கிக்கு தங்களைத் தருவிப்பதற்கும் மதுரை ஜில்லா மகா-ா-ா-ஸ்ரீ கலெக்டர் துரையவர்களிடம் வில்லேச்சேவகர் வைத்துக் கொள்வதற்காக ஆர்டர் வாங்கப்பட்டிருக்கிறது.

இந்தப்புஸ்தகத்தை அச்சிடுவதற்கு போடிநாயக்கனூர் ஜமீன் இராசிங்கபுரம் கிராமம் கரியப்பம்பட்டியிலிருக்கும் அ. கெ. திப்பண கவுண்டரவர்களால் சிரத்தையோடு ஒத்தாசை செய்யப்பட்டது.

முற்றிற்று

கவனியுங்கள்

சிறந்தவேலை! குறைந்த சார்ஜ்!



## பிரிண்டிங் விளம்பரம்

நம்முடைய ஆபீசில் பிரிண்டிங்
ரூலிங் & பைண்டிங் வேலைகள் நேர்
த்தயாகவும் மனதைக் கவரும்படியாகவும்
குறித்த வாய்தாப் பிரகாரம் செய்து
கொடுக்கப்படும்.

ஹக்கீம் பிரஸ்

போடிநாயக்கனூர்.